IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 26/2011**

| | |
|---|---|
| **DEPOSITION OF WITNESS** | **DW.1** |

| | | | |
|---|---|---|---|
| NAME | கிரிஜா | TALUK | |
| FATHER NA | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 03-03-2025

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தை 50 ஆண்டுகளுக்கு முன்பு எனது முன்னோர்கள் ஆண்டு அனுபவித்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். எனது கணவரின் பெற்றோர்கள் பெயர்கள் மட்டும் தான் தெரியும். அவர்களது முன்னோர்கள் பெயர்கள் தெரியாது. எனது முன்னோர்கள் ஆண்டு அனுபவித்த வந்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. எனது முன்னோர்கள் ஆண்டு அனுபவித்த வந்த சொத்து அரசாங்கத்தின் சொத்தா அல்லது தனிப்பட்ட நபர் சொத்தா என்றால் அரசாங்கத்தின் சொத்தாகும். எங்களுக்கு வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்டது. பட்டா எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மனை எண் எனக்கு தெரியாது. ஞாபகமில்லை. எந்த ஆண்டு பட்டா கொடுத்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. இதற்கு முன்பு இந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள் என்றால் சரிதான் அதன் எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த சொத்தும், இவ்வழக்கின் சொத்தும் ஒன்று தான். இவ்வழக்கு சொத்தை அளக்க நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். வழக்கறிஞர்கள் வந்தார்கள் ஆனால் அளக்கவில்லை. வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்திருந்தால் அது பொய்யான அறிக்கை என்றால் அவர்கள் தாவா சொத்தை அளக்கவில்லை.

4. 1988 ல் இருளர் இனத்திற்காக 21 மனை ஒதுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனையும் எங்களுக்கு எந்த மனையும் ஒதுக்கவில்லை. தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளாரீகளா என்றால் வீடு கட்ட விடாமல் தடுத்துவிட்டனர். அரசாங்க பசுமை வீடு திட்டத்தின் வழியாக தார்சு வீடு கட்டி அனுபவித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் பசுமை வீடு திட்டத்தின் வழியாக வீடு கட்டவில்லை. எங்களது சொந்த பணத்தில் வீடு கட்டியுள்ளோம்.

5. 1988 ல் சுப்பன் என்பவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது அவர் ஊரில் இல்லாததால் அதிகாரிகள் அந்த பட்டாவை திரும்ப எடுத்து சென்று விட்டனர். இன்று வரை சுப்பன் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அவர்கள் பட்டா வைத்துள்ளனர். ஆனால் மணியார் அலுவலகத்தில் எங்களுக்கு கொடுத்துள்ளனர். அரசாங்கம் சுப்பன் பட்டாவை ரத்து செய்துவிட்டு எனக்கு பட்டா வழங்கப்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

6. அ வ எண்.273/2010 வழக்கு எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்று கூறுகிறேன் என்றால் சரிதான். அ.வ எண்.273/2010 ல் மனை எண் செக்குபந்தி என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அரசாங்கம் மனை எண்.11 ஐ சுப்பன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும், அதை மறைத்து பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.M.N.Rajanandhivarmasiva,**
**District Munsif,**
**Gudiyattam.**